[1972 ஆகஸ்ட் 18

வேட்டுவபாளையம் குட்டை

*171. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், மங்கலம் கிராமம் வேட்டுவபாளையம் குட்டையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) மங்கலம் கிராமம் நில அளவை எண் 220-ல் உள்ள வேட்டுவபாளையம் குட்டையை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தின் வரை படங்களும் மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு பாசனத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளன.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, இது ஏறத்தாழ, இரண்டாண்டு காலமாக நடைபெறாமல் இருக்கிறது. அரசு இதில் விரைவாக நடவடிக்கை எடுக்க உத்திரவு பிறப்பிக்குமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, திட்ட மதிப்பீடு 66 ஆயிரம் ரூபாய். மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதலுக்கு இப்போது அனுப்பப்பட்டிருக்கிறது. அவருடைய ஒப்புதல் கிடைத்தவுடன் நிறைவேற்றப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட குட்டைகள், ஏரிகள் இவைகளைத் திட்டமிட்டு செப்பனிட எத்தனை ஆண்டுகள் ஆகின்றன. பரிசீலிக்க எத்தனை ஆண்டுகள், துவக்கிட எத்தனை ஆண்டுகள் என்ற விதி முறைகள் இருக்கின்றனவா ? அப்படி இல்லையென்றால் அவைகளை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.